செ.வெ.எண்: 59 நாள்:23.01.2017

## புதுக்கோட்டை மாவட்டத்தில் கருணை அடிப்படையில் 2 நபர்களுக்கு கிராம நிர்வாக அலுவலர் பணிநியமன ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் வருவாய்த்துறையின் சார்பில் பணியின் போது இறந்தவர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் அரசுப்பணிநியமன ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் இன்று (23.01.2017) வழங்கி கூறியதாவது:

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா, ஒடுக்கூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து பணியின் போது இறந்த திருமதி.லெட்சுமி என்பவரது மகள் செல்வி.ஞானசகாயசந்தியா என்பவருக்கு விராலிமலை தாலுகா, வேலூர் வட்ட கிராம நிர்வாக அலுவலராகவும், மணமேல்குடி தாலுகா, மஞ்சக்குடி கிராம உதவியாளராக பணிபுரிந்து பணியின் போது இறந்த திரு.கண்ணன் என்பவரது மகன் திரு.முத்துக்குமார் என்பவருக்கு மணமேல்குடி தாலுகா, செல்லப்பன்கோட்டை வட்ட கிராம நிர்வாக அலுவலராகவும் கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணி நியமன ஆணையினை பெறும் நபர்கள் கிராம நிர்வாக அலுவலர்களாக சிறப்பாக பணிபுரிந்து பொதுமக்களுக்கு சேவையாற்ற வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி, மாவட்ட ஆட்சியரக அலுவலக மேலாளர் திரு.சுப்பையா உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**